**<u>சி.சி.44/2018</u>** **<u>தேதி: 19-01-2021</u>**

**<u>அ.சா.1. வனஜா வயது 72, க/பெ, கோட்டீஸ்வரன், அருணபதி கிராமம்.</u>**

**<u>சாட்சி  சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இல்லத்தரசியாக பணிபுரிந்து வருகிறேன். எதிரியை பார்த்தது இல்லை. கடந்த 04-02-2018-ம் தேதி நானும், எனது கணவரும் இருசக்கர வாகனத்தில் அரசம்பட்டிக்குச் சென்று விட்டு மாலை 4.30 மணிக்கு வீட்டிற்கு வருவதற்கு கதவாணியில் இருந்து, எங்களுக்கு சொந்தமான டி.வி.எஸ். ஸ்கூட்டி வாகனத்தில்  எனது கணவர் வாகனத்தை ஓட்ட நான் பின்னால் உட்கார்ந்து வந்த போது, அருணபதி பிரிவு ரோட்டியில் மாலை 4.50 மணிக்கு சென்று கொண்டு இருந்த போது பிரிவு ரோட்டிற்கு வளைந்த போது  பின்னால் வந்துக் கொண்டு இருந்த மினி டெம்போ வேகமாக வந்து, எங்கள் வாகனத்தின் மீது மோதியது. நானும், எனது கணவரும் தூக்கி விசப்பட்டோம். எனது கணவர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, மூக்கில் இரத்தம் வந்தது. எனக்கும் கை, கால் அடிப்பட்டு காயம் ஏற்பட்டது. அங்கு இருந்தவர்கள் எனது மகனுக்கு தகவல் சொல்லி எனது மகன் வந்து எங்களை ஊத்தங்கரை அரசு மருத்துவ மனைக்கு அழைத்து வந்து சிகிச்சைக்காக சேர்த்தார். மருத்துவர் எனது கணவர் பரிசோதித்து இறந்து விட்டதாக சொன்னார். நான் சிகிச்சையில் இருந்த போது போலிசார் அங்கு வந்து வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.1-னு ஆகும். விபத்திற்கு காரணம் ஆஜர் எதிரி வாகனத்தை வேகமாக ஓட்டி வந்தது தான் காரணம் ஆகும்.  இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

எதிரிக்கு வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**ஓம்./ திரு.பா.திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**ஊத்தங்கரை.**